கடவுள் துணை.

செல்வப்பிள்ளை அகடவிகட

# கலியாணச்சிந்து.



இவை - சிறுமணவூர்

முனுசாமிமுதலியாராலியற்றப்பட்டு,

வ-இரத்தினவேலுமுதலியாரது
வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1898

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெ வீடு.

உ

கடவுள் துணை.

வந்தாவா போனாபோ

லோபிச்சிந்து யென்னும் இயற்பெயருடைய

# அகடவிகட கலியாணச்சிந்து.

தொப்பைவணக்கம் நேரிசைவெண்பா.

கைகாலுந்தொந்தியெலாங் காணபயமாய்வீங்கி
மெய்தூக்கமாட்டாத மேதகனே-பொய்யேன்காண்
செல்வமகனார்க்கு செய்யும்விவாகத்திலுனை
சொல்லாதிருப்பேன் துணை.

குரவன்துதி புராணவிருத்தம்.

மலமொரிந்தவனைக்காய்ந்த மடையனார்மகனேநல்ல
குலமனைதகண்டிக்கொள்ளாக் குருடனேகூரக்கேளாய்
தலைதில்லிகட ஞானத் தனையனார்மனத்தின்போது
இலைகனைமக்குரவாவுந்தன் சேவடியெனக்குப்போற்றி.

தகப்பனாராகிய லோபிசொல் தெம்மாங்கு.

யென்மகனேகண்மணியே கொஞ்சம் ஈஸ்பீஸுகற்றவனே
கலியாணமென்றுசொல்லும் ஒருகடநிறுக்குதெங்களுக்கு

சிந்து.

பெண்ணும்படிந்தாச்சு பணமுந்துகையாச்சு
யிடமுங்குதாந்தாச்சு யெல்லாம்முடிந்தாச்சு
முன்னேபெரியவர்கள் முழுதும்பிழைத்திருந்த
நாட்டுப்புறம்போய்வருவோம் நடடாமகனேயப்பா (௧)

இதுவும் லோபிசொல் தெம்மாங்கு.

பட்டணத்தில்செய்யவென்றால் அப்பா பகல்வேஷம்போடவேணும்
தட்டுமுட்டுஆட்டமொடுகொஞ்சம் தலையெரடிநிற்கவேணும்

சிந்து.

பத்தில்விழுந்தகொரு பாம்பும்மடியாதென்று
மெத்தப்பெரியவர்கள் யிட்டபழமொழிபோல்

ஆயிரங்காலப்பயிர் ஆகையினால்மகனே
உரவில்கலந்துகொண்டால் ஒருபோதுங்குற்றமில்லை (நா)

செல்வப்பிள்ளைசொல்-தெம்மாங்கு.

உரவும்வரகாச்சி அந்தஊர்முஞ்சுங்காஞ்சிப்போச்சு
ஐநோளனக்குஅந்த ஆதரவுந்தேவையில்லை

சிந்து.

டோண்டுநோபாதரந்த தொல்லையெனக்குவேண்டாம்
நாட்டுப்புரங்களெல்லாம் நான்ஸன்ஸ்வுதவாது
பைநாட்பிரதர்களோடு மட்டணந்தன்னிலே
பக்குவமாய்செய்யவெகு மிக்கவுரவிருக்குது (நச)

லோபி சொல் தெம்மாங்கு.

அடவுன்படிப்பில்யிடியிடிக்க அந்தபாஷையொன்றுந்தெரியலியே
நம்மகுடிவழக்கிலில்லாத கோணலெல்லாங்காட்டுகிறாய்

சிந்து.

எரியேமோக்ஷலோகம் எத்தமேகைலாசம்
கழனியேபஞ்சாங்கம் கலப்பையேவேதாந்தம்
மண்ணேபிரதானம் மண்வெட்டியேசாஸ்திரம்
யிப்படிப்பிழைத்துவிட்டோம்உன்னிழவுக்கென்னசெய்வோம்

செல்வப்பிள்ளை சொல் தெம்மாங்கு.

மாட்டைகுத்திமண்கிளரி இந்தமானமதைப்பார்த்தழுகும்
டேமிளிகட்கன்டிரீபூல் நீதொணதொணென்றுபேசாதே

சிந்து.

ஸ்டீரீட்முழுதும்பந்தல்வேணும் சிங்காரக்கோட்டாய்வேணும்
வால்சேட்டுகுளோப்புலஸ்தர் வரிசையாய்மாட்டவேணும்
பிரண்டுகள்ஷகேன்கொடுத்து பலமாயுலாத்தவேணும்
ஸ்டவுட்பீமில்ஸ்லேடிகளால் சதுர்கள்நடத்தவேணும்

கச்சேரிகாலட்சேபம் காலைமாலைபாடவேணும்
பிரஞ்சுபுலாகிச்சடிகள் பிச்சைக்கொடுக்கவேணும்
அதிர்வேட்டுமேளவகை அண்டங்கிழிடவேணும்
இப்படிநடத்திடாமல் தப்புந்தாறும்பினத்துகிறாய் (நா)

லோபிசொல் - தெம்மாங்கு. [த்தேன்

பட்டணத்தில்முட்டைவைத்து அப்பாவுன்னை படிபடியாய்நான்வளர்
கண்டுகுடம்விட்டதுபோல் யென்பணத்தைநாலுவழியாக்கவந்தாய்

செல்வப்பிள்ளைசொல் சிந்து.

நாலுவழிமூணுவழி நாலுமூணும்எழுவழி
யெந்தவழிபோனுலென்ன வந்தவழிபோரு
காடும்அழைக்குதங்கே வீடும்தாக்குதிங்கே
போடாயுபிளட்டிசுவர் பணம்போனால்மயிர்போச்சி.

செல்வப்பிள்ளைசொல் விருத்தம்.

அல்லோயென்பிராணரான பிரதர்களேதோழமாரே
பொல்லாதகிழவன்யேனே பிடிவாதமியற்றுகின்றான்
நல்லநாள்பார்த்தேன்சற்று நமக்குநேர்வுதவிசெய்தால்
யெல்லாருஞ்சேர்ந்தயின்றே யெமபுறங்காட்டலாமே.

தரு.

யெட்டியுதையுமெந்தன் மிஸ்டரே ஓரே
அட்டாய்தட்டிப்போடும் மிஷ்டரே

மட்டிக்கிழவன்சும்மா மனமும்பொறுக்கமாட்டான்
மயிலைப்போன்றவேசிமார்க்குங் கொடுக்கமாட்டான் (யெ)
பரத்தையர்சுகமிந்தப்பாவி யறியமாட்டான்
பணத்தைப்புதைத்துவைத்து பூதம்போல்காக்குறுன் (யெ)
அறுமைலேடிகள்சுகம் அனுவுமறியமாட்டான்
சிறுமணலூர்தமிழ் சொல்லுக்கேழ்க்கமாட்டான் (யெ)

(வசனம்.) இவ்விதமாக பிரண்டுகளோடு கூடிக்கொண்டு அசஸ்டா த்தாக அடல்தடல்வேடிக்கையுண்டுபண்ணி கிழவனுக்கு ஆனமட்டு ம்சரிப்படுத்தி மூலையில்தள்ளிவிட்டு சினேகிதர்களுக்கு உஷார்படுத் துகிறவிதங்காண்க.

செல்வப்பிள்ளைசொல் ஆனந்தக்களிப்பு.

பைகாட்சிசேகரேவாரும் எந்தன்
பணம்போனால்போகட்டும் வேடிக்கைபாரும் (பை)
வெற்றூர்மனம்நொந்துவேகட்டும் நம்ம
பேர்மாத்திரங்கோட்டைகொடிபோல் பறக்கட்டும்
உற்றூராவெல்லாம்சாகட்டும் சரியாய்
ஒவ்வொருஆயிரம் தூசிபோல்பறக்கட்டும்

வேசியெல்லாம்நம்மைநினைக்கட்டும் தினம்
வீண்கர்மம்செய்வோர்கள் ஆக்கைநசேசல்முழிக்கட்டும்
ராஜனென்றேநம்மைமதிக்கட்டும் நல்ல
ரயிட்டானடப்ளார்சு பிட்டின்கள்பரக்கட்டும் (௰௪)
சென்னையிலேபுகழ்விளங்கட்டும் சிறு
மணலூர்முனிசாமி தமிழாகசொல்லட்டும்
பண்ணியுலகெங்கும் படிக்கட்டும் இதை
பாடிவிற்போர்களும் சிலதுநாள்பிழைக்கட்டும் (௰௫)

செல்வப்பிள்ளை சிநேகருக்குசொல் விருத்தம்.

திக்கெட்டும்புகழ்படைத்தோமெனக்கிசைந்த
செல்வர்களேசிங்காரத்தோழமரே
மற்கட்டுந்தீரர்களே பணங்கனைக்க
மந்திரிபோல்தந்திரங்கள்செய்யும்பாசே
டிக்கட்டும்போட்டேஎந்தன் கலியாணத்தை
திரைகடல்சேருலகமெல்லாந்தெரியவிக்க
சொற்கட்டும்வந்தனங்கள்மூகூர்த்தகாலம்
சுருக்காகவெழுதிநிறைவேற்றுவீரே

ஆ ஆ யெனது அரியவிரிய பெரியபிரியமுள்ள செல்வப்பிள்ளையேகேளும் நம்மடிக்கட்டைப்பார்த்தாலே இந்திரன் அனுப்பிய திருமுகமபோலிருக்கவேணும் அதிலுள்ளசங்கதிகளோ திருமூர்த்திகளும அறியக்கூடாது ஏனென்றால் தாய்வுரவெனறும் தந்தை யுரவென்றும் மந்தைமந்தையாகவந்து சோத்தைவளைத்து பார்த்தவிடமெங்கும் பதுங்குவார்கள் ஆகையால அந்தபணத்தையெல்லாம் சங்கீதசாயித்தியபாரதகாட்டிய சுகபோகத்திற்சிறந்த நமது அருமைகண்மணிகளாகிய லேடிகளுக்கு முத்து ஆரங்கள் தோடாக்கள் கண்டாமணிகள் நவலோகங்களால் அமைத்தசேலைமுதலிய ஆடையாபரணதிகளை பரிசுக்கொடுப்போமானால் நம்மபெயர்யென்றைக்கும் அழியாதிருக்கும் ஆகையால டிக்கட்மாத்திரம் இக்கட்டாகவே யிருக்கவேணுமில்டோ.

செல்வப்பிள்ளை கலியாணடிக்கட்டின் விபரம்.

நொண்டிச்சிந்து.

திகழ்மகிழ்புகழ்படைத்த சென்னைவளர்
செல்வர்களேவிபரம சொல்லுவன்கேள்
நிகழுமிங்கிலீஷ்வருஷம் ஆயிரத்தி
யெண்ணூத்திதொண்ணூத்தி பொண்ணில்புகுந்து
நழுவியதமிழாண்டு மகாஜித்து
வருஷத்கூத்தாடிமாதம் நாற்பதாந்தேதி

உக்கிரவாரம்சிங்கமுகத்தில் இருவர்க்கும்
ஒருமித்தசுபதினம் மரணயோகத்தில்
காலையில்ஒருமணிக்கி வாய்திரந்து
கண்டமீனே துண்டுபூனே லக்கிணத்தில்
என்னிடஜேஸ்ட்டைபுத்திரன் சிரஞ்சீவி
யேணிபோலேபல்நீண்ட ஆசாமிக்கும்
தானறியாதவூர்க்கு மணியம்
தாசில்முனிஷிப்புமகள் யேகபுத்திரி
பஜாரிவேங்கையம்மாள் இருவர்க்கும்
பத்திரிகைசொன்னபடி சுபதினத்தில்
வெள்ளைபட்டணம்நடுவில் ஐயா
கொள்ளையடித்தான்மூலே பள்ளத்தெருவில்
அப்படிஇப்படியுந்தள்ளி டோர்நெம்பர்
ஆனமட்டுமெயென்விடு செங்கல்கிரகத்தில்
நடக்கும்முகூர்த்தத்திற்கும் மருநாள்
நாலுமேர்க்குமுன்கொளுத்தும் அக்கினிபேட்டிக்கு
இடையுபவாசத்திற்கும் தங்கள்
யிஷ்டருக்கும்யிஷ்டரோடு கஷ்டமாய்வந்து
மேல்படிசுபகிரிகை அனர்த்தத்தை
மெள்ளமெள்ளகெட்டியே நடத்துவீரென்று
மண்டிபோட்டுவிண்ணப்பஞ்செய்து தங்கள்
கிழானகனத்தைகொஞ்சம் பிரார்த்திக்குரேன் (தந்தின)

செல்வப்பிள்ளைசொல் லாவணி.

வல்லமைமிகுந்த செல்வரேவுமது
கல்விகள்சேரே ஐயா
வளமாய்கோடிசுபலமாயெழிதிகீர்
வருவார்வெகுபேரே
வாரமும்யோகமும் இப்படியமைந்திட
வரிந்தீர்பஞ்சாங்கம் ஐயா
வையகத்திலுமக்குநான கைம்மாறுசெய்திட
வரியேன்மெஞ்ஞானம்
செல்வத்தில்மிகுந்த சீமானென்றெனக்கு
செய்தீர்வுபகாரம்
சிறுமணவூர்முனிசாமிசொல் தமிழுக்கு
செய்வேனநமஸ்காரம்

சிநேகிதர்சொல் அலங்காரம்.

டிக்கட்டுமாத்திரமே தீர்ந்ததென்றுயெங்கள்பேரில்
யிக்கட்டுநினைக்கவேண்டாம் யெல்லாவேலையுந்தீர்ந்துதையா (௧)

7,8 PAGE MISSING IN BOOK